[1981 மார்ச் 3

(முற்பகல் 9-40)

திரு. கு. அ. செங்கோட்டையன் : 65 செண்ட் நிலம் விளையாடுவதற்காக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மேல்நிலைப் பள்ளியில் 1,200 மாணவர்கள் படிப்பதால் அதை விரிவுபடுத்தும் திட்டம் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் சொன்ன திட்டங்களே விரிவுப்படுத்துகிற திட்டங்கள்தான்.

கரூர் மில்ஸ் செலுத்த வேண்டிய வரிபாக்கி.

*வினா எண் 345—திரு. எம். சின்னசாமி ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் கரூர் தாலுக்கா தாந்தோணி பேரூராட்சிக்கு கரூர் மில்ஸ் நிர்வாகம் வரி செலுத்தாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொகை உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ரூ. 1,33,113·60

திரு. எம். சின்னசாமி : இந்தத் தொகை அதிகமாக இருப்பதால் அந்தப் பேரூராட்சியில் நடைபெறுகிற திட்டங்கள் அதனால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அதை விரைந்து வசூலிப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; தாந்தோணி பேரூராட்சிக்கு கரூர் மில்ஸ் நிறுவனத்தார் செலுத்த வேண்டியது ரூ. 1,33,113·60, நிலுவையில் இருக்கிறது. 1975–76ல் போட்டப்பட்ட வரி அதிகம் என்று அவர்கள் கோர்ட்டுக்கு சென்று வழக்கு தாக்கல் செய்து அது வழக்கு மன்றத்தில் இருக்கிற காரணத்தால் கடந்த 1980–81 வரை இந்த ரூ. 1,33,113·60 நிலுவையில் இருக்கிறது. தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.